# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Associate Editor : Rev. Dr. K. R. RAJASEKARAN

Vol. XXVII — YEAR OF OUR LORD JESUS CHRIST, AUGUST 2022 — No. 8


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**சங்கீதம் 107:31-41**

31. அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,
32. ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக.
33. அவர் ஆறுகளை அவாந்தரவெளியாகவும், நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாகவும்,
34. குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர் நிலமாகவும் மாற்றுகிறார்.
35. அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி,
36. பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார்; அங்கே அவர்கள் குடியிருக்கும் நகரத்தைக் கட்டி,
37. வயல்களை உண்டாக்கி விதைத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டுகிறார்கள். அவைகள் வரத்துள்ள பலனைத் தரும்.
38. அவர்களை ஆசீர்வதிக்கிறார், மிகுதியும் பெருகுகிறார்கள்; அவர்களுடைய மிருக ஜீவன்கள் குறையாதிருக்கப் பண்ணுகிறார்.
39. பின்பு அவர்கள் இடுக்கத்தினாலும், ஆபத்தினாலும், துயரத்தினாலும் குறைவுபட்டுத் தாழ்வடைகிறார்கள்.
40. அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சி வரப்பண்ணி, வழியில்லாத அவாந்தர வெளியிலே அவர்களைத் திரியச் செய்து,
41. எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்.

## உண்மை தேவ மக்களின் உன்னத அடையாளங்கள்!

## THE IDENTITIES OF TRUE CHILDREN OF GOD!


போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்


**ஆதியாகமம் 15 : 7–14: பின்னும் அவர் அவனை நோக்கி: இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார். அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன் என்றான். அதற்கு அவர்: மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக் கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும் என்னிடத்தில் கொண்டுவா என்றார். அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை. பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான். சூரியன் அஸ்தமிக்கும் போது, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது; திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது. அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக் கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்.**

ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் 430 வருடங்களுக்குப்பின், அவரது சந்ததியினரின் காலத்தில் நிறைவேறியது. வாக்குத்தத்தம் தந்தவர் உண்மையுள்ளவர்; அது நிச்சயம் நிறைவேறும். ஆகவே நாம் கர்த்தரை நம்பி வரும்போது, நமக்கு அது நீதியாக எண்ணப்படும்.

### கர்த்தரின் எதிர்பார்ப்பு

எப்பொழுதுமே கர்த்தர் பெரியதைக் கொடுக்க, சிறியதை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அதனைப் புரிந்து கொள்ள நம்முடைய அறிவு போதாது. **“ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில்கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்”** (ரோமர் 11: 33–36).

சாறிபாத் என்னும் ஊரிலுள்ள விதவையிடமிருந்து எலியா எதிர்பார்த்தது ஒரு சிறிய அப்பம்; ஆனால் அவளுக்குக் கிடைத்ததோ பஞ்சகாலம் தீரும்வரை மூன்றாண்டுகளுக்கான அப்பம் (1 இராஜாக்கள் 17:13–15). நம்முடைய வருமானம் சொற்பமாயிருந்தாலும், நம்மை அதிகமாய் ஆசீர்வதிக்கக் கர்த்தர் அதில் சிறிய ஒரு பகுதியை எதிர்பார்க்கிறார். இதுபோலவே தேவ மக்கள் பொருளாதாரத்தில் ஆசீர்வதிக்கப்படத் தங்கள் வருமானங்களில் எல்லாம் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பகுதியை அவரவர் ஆலயத்திற்குக் கொடுக்கக் கட்டளையிட்டுள்ளார். “என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான்


தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

**"இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்."**

– சங்கீதம் 145:8



## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.



**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


அன்புள்ள நண்பர்களே!

நமது ஆண்டவரும், உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அதிசயமான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

**அழைப்பின் எதிரொலி ஊழியங்களை** தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். உங்களையும் அவர் தமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடையச் செய்வாராக (சங்கீதம் 36:8).

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், இரக்கத்தினாலும் மட்டுமே நமது ஊழியத்தின் 54-வது ஆண்டுக்குள்ளாய் நாம் பிரவேசித்திருக்கிறோம். கடந்த ஆண்டுகளில் தேவன் எங்களுக்கு உண்மையுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும் இருந்ததற்காக அவரை ஸ்தோத்தரிக்கிறோம். இந்த முக்கியமான கால கட்டத்திலே எங்களது சுகத்திலும், துக்கத்திலும் எங்களுக்கு ஆதரவாய் நின்று, ஜெபித்து, அன்பு காட்டிய உலகமெங்குமுள்ள எல்லா நண்பர்களையும், ஊழியப் பங்காளர்களையும் நினைவுகூருகிறோம். தேவ கிருபையினால் உங்களது அன்பும், ஆதரவும் நமது ஊழியம் இந்த நிலைக்கு வளர உதவியாக இருந்து வருகின்றன.

இத்தருணத்தில் மகிமைக்குள் பிரவேசித்த நமது உடன் ஊழியர்கள் சகோதரர் ஜி. கமலரத்னம் I.A.S., சகோதரர் வாலர் தாசன், சகோதரர் எஸ்.சி. பக்கிள், சகோதரர் ஜெ. ஆர். சௌந்தரராஜ், சகோதரர் ஜெயகுமார் மகாராஜ், சகோதரர் டி. டபிள்யு. தேவகாந்தன், சகோதரர் ஆர். இ. ஜெயராஜ், சகோதரர் ஜி. ஜெயானந்த பால்மணி மற்றும் சகோதரர் மனுவேல் மு. பால்ராஜ் ஆகியோரை நன்றியுடன் நினைக்கிறோம். நமது ஊழியங்களில் அவர்கள் மிகப்பெரிய காரியங்களைச் செய்துள்ளார்கள்.

வருங்காலத்தில் நமது இந்திய தேசமெங்கிலும், அதன் அண்டைநாடுகளிலும் மேலும் பல சபைகளை நிறுவி, நமது ஊழிய எல்லையை விரிவடையச் செய்ய திட்டமிட்டு வருகிறோம். நமது ஊழியத்தின் 54-வது வருடத்திலே கர்த்தர் தந்த தரிசனத்தை நிறைவேற்ற எங்களுக்காக நீங்கள் ஜெபித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சில எதிர்மறையான சூழ்நிலையான கோவிட்-19 முழு அடைப்பு நிமித்தமாக, கடந்த சில வருடங்களில், நாங்கள் நினைத்ததுபோல முன்னேறிச் செல்ல கடினமாக இருந்தது. சத்துருவின் வல்லமை முழுவதுமாக அழிக்கப்படவும், உலகமெங்கும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படவும் அதிக நேரம் செலவழித்து ஜெபிக்க முன்வாருங்கள்.

நேபாளம், வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று நம் மக்களை சந்திக்கவும், கர்த்தர் அனுகூலமான வாசல்களைத் திறக்கவும் உங்களின் ஊக்கமான ஜெபம் எங்களுக்கு அவசியமாயிருக்கிறது.

வெளியே சொல்ல முடியாத பல்வேறுபட்ட பிரச்சனைகளை நாங்கள் சந்தித்து வருகிறோம்... இருப்பினும் அனைத்தும் கர்த்தரின் ஆளுகைக்கு உட்பட்டுத்தான் இருக்கின்றன.

உங்களுக்காகவும், உங்கள் தேவைகளுக்காகவும், உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்க தொடர்ந்து ஜெபித்து வருகிறோம் (3 யோவான் 2). **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியங்களுக்கும், இதர ஊழியங்களுக்கும் நீங்கள் அளித்துவரும் அன்புக்கும், ஆதரவுக்கும் மிக்க நன்றி. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,


**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 3 : 10).

ஒருவேளை பல நெருக்கங்களோடும், போராட்டங்களோடும் அகப்பட்டு எவ்வளவு முயற்சி பண்ணியும் வெற்றியை காண முடியவில்லையே என்று மனம் கலங்கி தவித்துக் கொண்டு, எப்பொழுதும் ஆண்டவரே என்று காத்திருக்கும் நிலைமையில் இருப்பீர்களானால், நிச்சயமாகவே உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் ஒரு பெரிய அற்புதத்தை செய்வார். நாம் நம்மை பொறுத்தமட்டில் மூன்று காரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## 1. தேவன் நமக்கு இரக்கமாக அளித்துள்ளத் தகுதியை நாம் காத்துக் கொள்ள வேண்டும்!

தேவனுடையப் பிள்ளைகள் இந்த உலகத்திற்கு உரியவர்கள் அல்ல. நம்முடைய குடியிருப்புப் பரலோகத்தில் இருக்கிறது (பிலிப்பியர் 3:20). **கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங் களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்** (எபேசியர் 2:7) என்று வேதம் கூறுகிறது. பல சந்தர்ப்பங்களிலே நாம் இந்த தெய்வீகத் தகுதியை மறந்து செயல்படுகிறோம்.

இதை இப்படியாக விளக்கலாம், ஒரு தேசத்தின் அதிபருடைய அலுவலகம் அத்தேசத்தின் தலைநகரில் இருக்கிறது. அங்கிருந்து அவர் செயல்படுகிறார். ஆனால் அவர் எப்போதும் அங்கேயே இருப்பது இல்லை. பல தேசங்களுக்குப் பிரயாணம் செய்கிறார். அவர் ஏதாவது ஒரு தேசத்திற்குச் சென்றவுடன் அவருடைய குடியுரிமையும், அவரது செயல்படும் செயலகமும் மாறுவதில்லை. அவர், அவருடைய சொந்தத் தேசத்தின் குடிமகனாகவே இருக்கிறார். இதே வண்ணமாக தேவனுடைய பிள்ளைகள் எந்தத் தேசத்தில் வாழ்ந்தாலும், அவர்கள் பரலோக வாசிகள்; அவர்கள் இந்த உலகத்திற்குச் சொந்தமானவர்கள் அல்லவே அல்ல. இப்படியாக சில காலம் நாம் இந்த உலகத்தில் தங்கியிருக்க அனுமதி பெற்றுள்ளப் பரதேசிகளாக இருக்கிறோம். பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப் போல இருக்கிறது (1 நாளாகமம் 29:15). **பூமியிலே நான் பரதேசி** (சங்கீதம் 119:19). **நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமதுப் பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின** (சங்கீதம் 119:54). தெரிந்து கொள்ளப்பட்டப் பரதேசிகள்

(1 பேதுரு 1:2).

இந்த அடிப்படை உண்மையை மனதில் ஆழமாகப் பதித்துக் கொண்டவர்களாகத்தான் நாம் இந்த உலகத்தில் அனுதினமும் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். பூலோகத்தில் அல்ல, பரலோகத்தில் நாம் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத்தேயு 6 : 19, 20). நாம் உலகத்தின் எந்த நாட்டிலும் வாழலாம்; எந்த மொழியையும் பேசலாம். ஆனால் நம்முடைய உண்மையான சொந்தத் தேசம் பரலோகம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கலாகாது. நாம் எந்தத் தேசத்திற்குச் சொந்தமானவர்களோ, அந்தத் தேசத்தின் கலாச்சாரமும், பழக்க வழக்கங்களும் நம்மை வழிநடத்தும். நாம் எல்லாவற்றிற்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரித்து பயபக்தியோடே ஒருவருக்கொருவர் காணப்பட வேண்டும்.

இதனை வேதம் பின்வருமாறு விளக்குகிறது: நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் (எபேசியர் 5:20–22). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள் (எபேசியர் 5 : 25).

நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று எழுதப்பட வேண்டும் (1 பேதுரு 1:15, 16). "**அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்**..." (சகரியா 14:20). "**இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும், அவருடைய விளைவின் முதற்பலனுமா யிருந்தது**..." (எரேமியா 2:3). "**ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியான வர் எங்கே போனாலும் அவரை பின்பற்று கிறவர்கள் இவர்களே;இவர்கள் மனுஷரி லிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவ ருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள்**" (வெளிப்படுத்தின விசேஷம். 14:4).

நாம் பரலோகத்தின் குடிமக்கள் என்கிற தகுதியை நம் எல்லா செயல்களிலும் வெளிப்படுத்தவும், அதனைக் கட்டிக் காக்கவும் முன்வர வேண்டும். பிறர் செய்யும் தவறுகளை நாம் ஏன் செய்யக்கூடாது என்றும், அவர்களைப்போல் நாமும் செய்யாவிட்டால் இந்த உலகத்தில் வாழ்வது எப்படி என்றும் கேள்விகள் எழும்பும் சந்தர்ப்பங்களில், மற்றவர்கள் செய்தாலும் நான் செய்யக்கூடாது என்கிற மனநிலைக்குள் நாம் கடந்து வர வேண்டும். இதனை என் போதகர் சுந்தரம் ஐயா சொல்லும்போது, "மற்றவர் செய்யலாம்; ஆனால் நான் செய்யக் கூடாது, செய்யவும் மாட்டேன்" (Others may do but I should not and will not…).

இப்படியாக நம் எல்லா நிலைகளிலும் நாம் ஒரு தனித்தன்மை வாய்ந்தவர்களாக, வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கைக்குட்படுத்தப் பட்டவர்களாக வாழ வேண்டும். அநேகக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், வேலை மற்றும் தொழில் போன்ற உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற எண்ணத் தில் வாழ்கிறார்கள். ஆலயத்திற்கும், ஊழியத்திற்கும் வரும்போது காணப்படும் சந்தோஷமும், அன்பும், உண்மையும் அவர்கள் வேலை செய்யும் இடங்களில் அல்லது தொழில் செய்யும் இடங்களில் காணப்படுவதில்லை. வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டு, ஊழியமும் செய்கிறவர்கள் தங்கள் வேலை ஸ்தலங்களிலும், வியாபார ஸ்தலங்களிலும் தேவனுடைய பிள்ளைகளாக அடையாளங் காட்டி, தங்கள் உண்மையை நடைமுறைப் படுத்துவது இல்லை.

விசுவாசிகளும் மற்ற வேலையாட் களைப்போலத் தங்கள் எஜமான்களுக்கு உண்மையற்றவர்களாகவும், வியாபாரத் தொழில் செய்கிறவர்கள் மற்ற வியாபாரிகளைப் போல ஏமாற்றுகிறவர்களாவும் இருக்கின்றனர். தங்கள் தொழில் திறமையையும், அதிக இலாபம் ஈட்டும் தொழில் யுக்திகளையும், கூடுமானால் தாங்கள் சார்ந்திருக்கும் தேவ ஊழியங்களிலும் தங்களைப் போஷிக்கும் தேவ ஊழியர்களிடமும் கூட செயல்படுத்தி விடுகின்றனர். அவர் களுக்குப் புத்தி சொன்னால், ஊழியம் வேறு, தொழில் வேறு என்றுத் துணிந்து சொல்லுகின்றனர்; இது முற்றிலும் தவறு. தேவமக்கள் தங்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும், தங்களை தேவ ஊழியக்காரர்களாக விளங்கப் பண்ண வேண்டும். "**இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்கா மல், எவ்விதத்தினாலேயும், எங்களை தேவ ஊழியக்காரராக விளங்கப் பண்ணுகிறோம்**" (2 கொரிந்தியர் 6 : 3).

### அ) ஒரு அனுபவம் :

ஒருமுறை தனது ஊழியத்துடன், அக்கார்டியன் (Accordion) என்னும் இசைக்கருவியை வாங்கி விற்பனை செய்யும் தொழிலையும் செய்து வந்த ஒரு பிரபலமான ஊழியரிடம் நான் அக்கார்டியன் ஒன்றை விலைக்கு வாங்கச் சென்றேன். அவர் ஒரு குறிப்பிட்ட அக்கார்டியனை என்னிடம் காட்டி, இந்த வகை அக்கார்டியன்தான் உலகிலேயே மிகச் சிறந்த உற்பத்தியாளர்களால் உருவாக்கப்பட்டது என்று கூறினார். நான் தகுந்த விலை கொடுத்து அதனை வாங்கிவிட்டேன்; வாங்கிய ஒரே வாரத்தில் ஊழியத்திற்கு எனக்குப் பணம் தேவைப்பட்டது; வேறு வழியில்லாத காரணத்தால் நான் வாங்கிய அந்த அக்கார்டியனை, அதே ஊழியரிடம் கொண்டுப் போய் என் பொருளாதாரக் கஷ்டத்தை விவரித்துச் சொல்லி அதனை விற்க வேண்டும் என்று கூறினேன். உடனடியாக அவர், "சகோதரனே, இந்த அக்கார்டியனை யார்

வாங்குவார்கள்? இதனை உருவாக்கிய உற்பத்தியாளர்கள் இன்று சந்தையில் இல்லை. அவர்கள் தங்களுடைய தொழிற்சாலையை மூடி பல வருடங்கள் ஆகி விட்டன. இது ஒரு மோசமான பொருள். எந்தச் சூழ்நிலையிலும் இது விற்பனைக்குரியப் பொருள் அல்ல. எனவே இதனைக் கொண்டு போய் விடுங்கள்" என்றார். அன்பு தேவப் பிள்ளைகளே நாம் இப்படி இருக்கலாகாது. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற ஸ்தானத்திலிருந்து சற்றேனும் தடம் புரளக்கூடாது. இதில் உலகப் பிரகாரமான வேலை செய்கிற மற்றும் தொழில் செய்கிற தேவ மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விசுவாசிகளாக இருக்கும் மக்கள் உலக மக்களோடு சேர்ந்து போதைப் பொருட்களை அருந்துவதும், நடனமாடுவதும், லஞ்சம் வாங்குவதும், போதைப்பொருட்களை வியாபாரம் செய்வதும், தொழிலில் மோசடி பண்ணுவதும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். விசுவாசிகள் என்ற போர்வையில் வாழும் ஏராளம் கிறிஸ்தவத் தொழிலதிபர்களை நம்பி நான் பலமுறை ஏமாற்றப்பட்டுள்ளேன்.

### ஆ) இன்னொரு அனுபவம்:

ஒருமுறை ஒரு மருத்துவரை சந்திக்க, ஒரு பிரபலமான மருத்துவமனைக்கு என் நண்பர் ஒருவரை அழைத்துச்செல்ல நேர்ந்தது. மருத்துவரின் அறைக்குள் சென்றுவிட்டோம்; அங்கு ஏராளம் மருத்துவக் கருவிகளும், உபகரணங்களும் இருந்தன. ஆனால் மருத்துவருடைய நாற்காலி காலியாக இருந்தது. மருத்துவரைக் காணவில்லை. சற்று உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு சிலர் பேசிச் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அங்கிருந்த ஒருவருக்கு வந்தனம் கூறி, அவர் மருத்துவர் எனக்கருதி எங்கள் பிரச்சினைகளை அவரிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தோம். உடனே அவர் அந்தக் கூட்டத்தில் இருந்த, மற்றொருவரைக் காண்பித்து, இவர்தான் மருத்துவர் என்றார். மருத்துவருக்குச் சென்று சேரவேண்டிய மரியாதை சம்பந்தம் இல்லாத ஒருவருக்குச் சென்று சேர்ந்தது. தேவன் நமக்கு ஈவாக நல்கியிருக்கும் தகுதியை நாம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். அதனை அற்பமாக எண்ணக்கூடாது. **"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்"** (2 பேதுரு 1:10,11).

தேவப்பிள்ளைகள் தங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவன் தங்களுக்கு அருளியிருக்கும் பொறுப்புகளை மதிக்க வேண்டும். விசுவாசிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதிலும், ஊழியர்கள் தங்கள் ஊழியங்களை நிறைவேற்றுவதிலும் பெருத்தக் கவனம் செலுத்த வேண்டும். தேவனுடைய பிள்ளைகள்தான் இந்த உலகத்தில் உயர்ந்தவர்கள். இவர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும், இவர்களுடைய சுயதேசம் பரலோகம், எனவே இவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள்.

### 2. இரட்சிப்பின் வஸ்திரத்தை எப்போதும் உடுத்திக் கொள்ள வேண்டும்!!

**"கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்"** (ஏசாயா 61:10).

ஒரு மனிதரை அவர் அணிந்திருக்கும் ஆடை அடையாளம் காட்டுகிறது (The dress maketh a man). ஒரு மருத்துவமனைக்குள் செல்லும்போதே, அங்கு பணியாற்றும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த பணியாளருக்கும் பல்வேறு சீருடைகள் வழங்கப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது; காவலருக்கு வித்தியாசமான உடை, துப்புரவுப்பணியாளர்களுக்கு வித்தியாசமான உடை, வரவேற்பாளர்களுக்கு வித்தியாசமான உடை, செவிலியர்களுக்கு வித்தியாசமான உடை, மருத்துவர்களுக்கு வித்தியாசமான உடை – இவ்வாறு அவர்களுடைய உடையைப் பார்த்த உடனேயே அவர்களுடைய பொறுப்புகளை அறிய முடிகிறது.

அதுபோல, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட யாவரும், அவரால் அருளப்பட்ட இரட்சிப்பு என்னும் உடையைத் தரித்துக்கொள்ள வேண்டும். ஒரு நபர் நமக்கு அறிமுகம் இல்லாதவராயிருந்தாலும் அவர், இரட்சிக்கப்பட்டவராயிருந்தால் அவருக்குள் இருக்கும் தெய்வீகத் தன்மைகளையும், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் அவருக்குக் கிடைத்திருக்கும் இரட்சிப்பின் சந்தோஷத்தையும் நம்மால் உணர முடிகிறது அல்லவா? நம் ஆலயங்களில் மட்டுமின்றி, நம் தொழில் ஸ்தலங்களிலும், சந்தைவெளிகளிலும், எல்லா இடங்களிலும் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக மற்றவர்கள் அடையாளம் காணக்கூடிய அளவுக்கு நடந்து கொள்வோமென்றால், அதுவே வார்த்தைகளின்றிக் கர்த்தரை மகிமைப்படுத்துவதாகும்.

இன்றைய உலகில், குறிப்பாக ஆவிக்குரிய மக்கள் மத்தியில்கூட தேவன், இரட்சிப்பு, ஜெபம் போன்ற வார்த்தைகளை மற்றவர் மத்தியில் உச்சரிக்கத் தயங்குகிறார்கள். ஆலயத்திற்குச் செல்லும்போதுகூட, பரிசுத்த வேதாகமத்தைக் கையில் வைத்திருப்பதைத் தரக்குறைவாக நினைக்கும் காலமாக இருக்கிறது. வேதத்தை சுமக்கும் கரங்களும், மண்டியிட்டு ஜெபிக்கும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


## நெகேமியா வேதாகம மாலை நேரக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : தமிழ்

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd. 1969

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**
**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
**மின்னஞ்சல்:** sam@echoofhiscall.org /**இணையதளம்:** www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 ஆகஸ்டு 19 முதல் செப்டம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஆகஸ்டு 19 ⇨ நம்முடைய **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் 10ம் வகுப்பு மாணவர்கள் அரசு பொதுத் தேர்வில் 100% வெற்றி பெற்றமைக்காக...

ஆகஸ்டு 20 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும்... அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும்...

ஆகஸ்டு 21 ⇨ நமது மணிப்பூரி மொழி பத்திரிகை தங்குதடையின்றி வெளிவர...

ஆகஸ்டு 22 ⇨ **நமது சுவிசேஷத்தின் அச்சகத்தின்** தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...

ஆகஸ்டு 23 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக...

ஆகஸ்டு 24 ⇨ பணித்தளங்களில் செயலாற்றும் நமது ஊழியர்களையும், அவர்களது குடும்பங்களையும் பாதுகாத்து வருவதற்காக...

ஆகஸ்டு 25 ⇨ நமது தலைமைச்சபையின் ஞாயிறு ஆராதனைகளுக்காகவும் மற்றும் தேவச்செய்திகளுக்காகவும்...

ஆகஸ்டு 26 ⇨ நமது சபைகளுக்கு புது அங்கத்தினர்களை கொடுத்தற்காக...

ஆகஸ்டு 27 ⇨ நமது ஊழியப் பங்காளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

ஆகஸ்டு 28 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

ஆகஸ்டு 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களுக்காகவும் மற்றும் அவர்களது ஈடுபாட்டிற்காகவும்...

ஆகஸ்டு 30 ⇨ **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களுக்கான புதிய மாணவர்களை கொடுத்ததற்காக...

ஆகஸ்டு 31 ⇨ நமது கடந்த மாதத் தேவைகளை தேவன் சந்தித்ததற்காக...

செப்டம்பர் 01⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

செப்டம்பர் 02⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

செப்டம்பர்03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு,** புதிய மாணவர்கள் கிடைத்ததற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

செப்டம்பர் 04 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வளர்ச்சிக்காக மற்றும் விரிவாக்கத்திற்காக...

செப்டம்பர் 05 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் பங்காளர்களுக்காக மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் நல்வாழ்வுக்காக...

செப்டம்பர் 06 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...

செப்டம்பர் 07 ⇨ இந்தியாவில் சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட...

செப்டம்பர் 08 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட...

செப்டம்பர் 09 ⇨ நமது ஊழியத்தில் சபை உறுப்பினர்கள் மிகுந்த ஈடுபாட்டோடு செயல்படவும், நன்மை பெறவும் ...

செப்டம்பர் 10 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

செப்டம்பர் 11 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க...

செப்டம்பர் 12 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

செப்டம்பர் 13 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களுக்கு மேலும் கூடுதலாக மாணவர்கள் வந்து சேரவேண்டி...

செப்டம்பர் 14 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப...

செப்டம்பர் 15 ⇨ இந்த 2022–23ம் கல்வி ஆண்டில் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** மேலும் புதிய மாணவர்கள் சேர்க்கப்பட...

செப்டம்பர் 16 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவேண்டி...

செப்டம்பர் 17 ⇨ சமாதானமும், சந்தோஷமும் உலகமெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களிடையே நிறைந்திருக்க...

செப்டம்பர் 18 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காகவும்...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

முழங்கால்களும் வாழ்க்கையில் தோல்வியடைவதேயில்லை என்பதை இக்கால மக்கள் அறியாதிருக்கிறார்கள்.

ஒருமுறை நான் என் குடும்பத்துடன் ஒரு உணவு விடுதியில் உணவு உண்ணச் சென்றேன். நல்ல ஆகாரங்கள் பரிமாறப்பட்டன. உணவை உண்ண ஆரம்பிப்பதற்கு முன்னர் நாங்கள் கண்களை மூடி அந்த நல்ல தருணத்திற்காகவும், ஆகாரத்திற்காகவும், ஆண்டவருக்கு நன்றி ஜெபம் ஏறெடுத்தோம். கண்களைத் திறந்து பார்க்கும்போது, எதிர் மேசையில் உட்கார்ந்து உணவு உண்ட சில கிறிஸ்தவர்கள் எங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தனர். இப்படியும் ஆட்கள் இருக்கின்றார்களே என்று கேட்கும் வண்ணமாக அவர்களுடைய பார்வையும், செயல்பாடுகளும் அமைந்திருந்தன.

எந்த இடத்திலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் இப்படி நாம் செய்து பழக வேண்டும். நம்மைக் காண்பவர்கள் நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று அறியட்டும், ஏதாவது பேசட்டும். நம்மைக் காண்பவர்கள் நம்முடைய இரட்சிப்பின் வஸ்திரத்தைப் பார்க்க வேண்டும். நம்மைப் பார்த்தவுடனே, நீங்கள் கிறிஸ்தவரா ? இரட்சிக்கப்பட்டவரா ? என்று கேட்க வேண்டும்; அல்லது அறிய வேண்டும். அந்த அளவுக்கு நம்முடைய உடைகளும், சரீரங்களும் பராமரிக்கப்பட வேண்டும். நம்முடைய முகங்கள் நம்முடைய இருதயத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்; பார்வை குற்றமற்றதாய் தெளிந்த பார்வையாய் இருக்க வேண்டும்.

நான் ஒருமுறை ஒரு வெளி தேசத்திற்கு ஊழியத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு ஊழியம் செய்த ஒரு ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த ஒரு போதகர் என்னைத் தன்னுடைய சபையில் ஊழியம் செய்ய அழைத்திருந்தார். அவர் மிகவும் அன்புள்ளவர். அவரிடம் தேவ சாயலைப் பார்க்க முடிந்தது. அன்று மாலையில் அவர் என்னை வெளியே அழைத்துச் சென்று, ஒரு தேவ மனிதனுடைய நடை, உடை, பாவனைகள் எல்லாம் எவ்விதமாக இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். மதுபானம், சிற்றின்பம் போன்ற பாவங்களைக் குறித்து சரளமாகக் கண்டித்துப் பேசும் ஊழியர்கள்; அப்பாவங்களுக்கு விலகி வாழ்கின்றனர் என நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆனால் மாறுபட்ட சூழ்நிலைகளான ஆகாய விமானத்தில் பிரயாணம் பண்ணும்போதும், வெளிநாடுகளில் வாழும் போதும் அவர்களில் பலர் தங்கள் இஷ்டம்போல் வாழ்கின்றனர்! இது மிகவும் பரிதாபகரமானது.

சாலைகளில் வாகனங்கள் வேகமாகச் செல்லுகின்றன; அவை எவ்வளவு வேகமாகச் சென்றாலும், போக்குவரத்து நெரிசல் எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும் சீருடை அணிந்திருக்கும் ஒரு காவலர் தன் கையை உயர்த்தி "நிற்க" என்கிற சைகை காட்டியவுடன் எல்லா வாகனங்களும் உடனடியாக நிற்கின்றன. சீருடை அணிந்த காவலர் தன் கையை உயர்த்தி "நிற்க" என்று சொல்வதற்கும், சீருடை அணியாத காவலர் தன் கையை உயர்த்தி "நிற்க" என்று சொல்வதற்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது அல்லவா! அவர் அணிந்திருக்கும் உடை அவருடைய அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் இந்த இரட்சிப்பு என்கிற அனுபவம் நமக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது; எல்லா தீமைகளிலிருந்தும் நம்மைக் காக்கிறது.

சங்கீதம் 18:35-ல் "**உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய வலது கரம் என்னைத் தாங்குகிறது ...**" நாம் பாதுகாப்பாக வாழ வேண்டுமானால் இரட்சிப்பை நாம் உடுத்திக் கொள்ள வேண்டும். அது நம்மைத் தீமைகளினின்றும், எதிரிகளின் விக்கினங்களினின்றும் ஒரு பாதுகாப்பை அளிக்கும் கேடயமாக நின்று நம்மைப் பாதுகாக்கிறது. ஆக, எல்லாச் சூழ்நிலைகளிலும் இந்த இரட்சிப்பு என்னும் கேடயம், கவசம் நமக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

நாம் உலக மக்களாலும், பிசாசினாலும் தாக்கப்படும் சூழ்நிலைகள் வரும்போது, இரட்சிப்பு என்னும் வஸ்திரம் நம்மைப் பாதுகாக்கும். ஒருமுறை ஊழியம் செய்யும் என் நண்பர் ஒருவர் நடந்த சம்பவம் ஒன்றைச் சொன்னார். அதாவது, ஒரு மனிதன் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு மிகுந்த இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டான். உணவருந்த முடிவதில்லை. கண்ணில் கண்ட எல்லா மக்களையும் சரீர பிரகாரமாகத் தாக்கி உபத்திரவங்களைச் செய்து வந்தான். அவனை ஒரு நாள் இந்த தேவ மனிதரிடம் ஜெபிப்பதற்காக அவனுடைய குடும்பத்தினர் அழைத்து வந்தனர்.

தேவ மனிதர் அவனுக்காக ஜெபிக்க ஆரம்பித்தவுடன், அந்த மனிதனிடமிருந்த அசுத்த ஆவி இவ்விதமாகச் சொன்னது; "இந்த மனிதன் ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிக்கிறவன். ஆனால் சமீபத்தில் இந்த கிராமத்தில் ஆவிகளுக்கு அளிக்கப்பட்ட வழிபாட்டில் இவனும் உற்சாகமாகக் கலந்து கொண்டான். ஆகவே இவனிடம் நான் புகுந்து இவனுக்குள் தங்கியிருக்கிறேன். மேற்கொண்டு இவனுக்குத் தீங்கு எதுவும் செய்ய என்னால் முடியவில்லை. காரணம், இவனுடையப் பெற்றோர் இவனுக்கு "இம்மானுவேல்" என்றுப் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பெயரை இவன் தரித்திருக்கிறபடியால் இவனை அழிக்க எனக்கு முடியவில்லை." பாருங்கள், இம்மானுவேல் என்றப் பெயருக்கே சாத்தான் நடுங்குகிறான்.

எனவே, பிள்ளைகளுக்குப் பெற்றோர் பெயர் சூட்டும்போது கவனமாயிருக்க வேண்டும். சில கிறிஸ்தவப் பெற்றோர்கள்கூட தங்கள் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும்போது,


## நெகேமியா வேதாகம முழு/மாலைநேரக் கல்லூரி, சென்னை.

**வேளச்சேரி / சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : இந்தி/தமிழ்

*Registered Candidate for Membership*

Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**

**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

எந்தக் கவனமும் செலுத்தாமல், வாயில் நுழையாத விசித்திர, வினோதப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டுகின்றனர். நல்ல வேதாகமப் பெயர்களை சூட்டி மகிழுங்கள். நல்ல ஆவிக்குரிய தலைவர்களின் பெயர்களை சூட்டி உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதியுங்கள். கிறிஸ்துவுக்காக வாழ்ந்த மிஷனரிமார்களின் பெயர்களை சூட்டி அவர்களை நல்வழியில் நடத்துங்கள். இவைகள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்வாழ்வையும், நல்ல இலட்சியங்களையும், பாதுகாப்பையும் உருவாக்கும். **“இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்’’** (வெளி. 16 : 15).

## 3. வேறுபடுத்தப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும்!!!

**“ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்று கிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கை யாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். மேலும், பரிசுத்தவான் களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவை கள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபச்சாரக் காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாரா தனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே’’** (எபேசியர் 5 : 1–5).

எதையும் பேசலாம். எப்படியும் வாழலாம் என்னும் அடிப்படையில் உலக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தோடு ஒட்டி விடக்கூடாது என்று தேவன் எதிர்பார்க்கிறார். ‘உலகத்தோடு ஒத்து வாழ்’ என்பது உலகப் பேச்சு. ஆனால் தேவனுடையத் திட்டமாவது, நாம் உலகத்தில் வாழ்ந்தாலும், உலக மக்களைவிட்டுப் பிரிந்து வாழ வேண்டும் என்பதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் சக கிறிஸ்தவர்களிடமே சேராமலும், பேசாமலும் தனித்து நின்று தாங்கள் மட்டுமே வேதத்தைச் சரியாக அறிந்தவர்கள் என்று கூறுவது முற்றிலும் தவறு. தேவ மக்கள் எல்லாரும் ஒன்றுபட்டு நிற்பதில் தவறு இல்லை. வேதம் கூறும் வேறுபடுத்தப்பட்ட வாழ்க்கை என்பது வேறு, இதனை நாம் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும். வேறுபடுத்தப்பட்ட ஜீவியத்தை அடைய கீழ்க்கண்டவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.

### அ. தேவனைப் பின்பற்ற வேண்டும்

இந்த நாட்களில் ஏராளமான கிறிஸ்தவ மக்கள் அரசியலில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் அங்கும் உண்மையைக் காத்துக் கொள்வார்களேயென்றால் தேவ நாமம் தூஷிக்கப்படாது. மக்களுக்குத் தொண்டாற்றும் ஒருவழி என அதைக் கொள்ளலாம். ஆனால் அது முதன்மையாக இருத்தல் ஆகாது. ஆனால் விசுவாசிகளும் சில போதகர்களும்கூட அரசியலில் குதித்து, தாங்கள் தங்கள் தேவனிடமிருந்துப் பெற்றக் காலங்களையும், தாலந்துகளையும் விரயமாக்கி வருகின்றனர். மாறாக, இவர்கள் தங்கள் தங்கள் சபைகளுக்கும், குடும்பங்களுக்கும் செலவிட வேண்டிய நேரங்களையும், பொருளாதாரங்களையும் அரசியல் காரியங்களுக்காகச் செலவிடுவது சரியல்ல. அப்படியே தேவ ஊழியத்தைச் செய்வதற்காகப் போதகர்களாக அழைக்கப்பட்டவர்கள் தங்கள் ஊழியங்களைத் தள்ளி வைத்துவிட்டு, அரசியல் செய்வது சரியாகத் தென்படவில்லை.

### ஆ. உலகக் காரியங்களில் சிக்கிக் கொள்ளக் கூடாது

**“ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவ கனாய்த் தீங்கநுபவி. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான். மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணா விட்டால் முடிசூட்டப்படான்’’** (2 தீமோத்தேயு 2 : 1,3,4,5). இதில் தேவனால் ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள் தங்கள் பிழைப்புக்கடுத்த வேலைகளைச் செய்தாலும், அவற்றோடுகூட அரசியல், சங்கம், வியாபாரம், மன்றங்கள், போன்றவற்றில் **சிக்கிக் கொள்ளக்கூடாது**. இதில் **சிக்கிக் கொள்ளுதல்** என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. “எந்த

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

**இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்**

### I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in


## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி’’ அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |




# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## ஊழியத்திற்கு என் தேவனின் அழைப்பு!!




எஸ். சாம் செல்வ ராஜ்

என்னுடைய சுமார் 16, 17, 18 வயதுகளில் பரிசுத்த ஆவியானவர் எனக்குள் பல மாற்றங்களையும், புதிய சிந்தனைகளையும் நல்கினார். அந்நாட்களில் என்னை யாரோ ஒருவர் ஓர் புதிய பாதைக்குள் உந்தித் தள்ளுவதை நான் உணர்ந்தேன். எனவே, என் வருங்கால செயல்பாடுகளுக்குத் தேவையானதும், தற்போதைய ஊழியத்தில் பயனளிக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில அறிவு ஆகியவற்றைக் கற்றதோடு, அக்காலத்தில் வாழ்ந்த



சகோதரி சாராள் நவரோஜி



போதகர் சாது இயேசுதாஸ்

உண்மை தேவ ஊழியர்களாக நான் கண்ட அன்புக்குரிய போதகர் எஸ். தேவதாசன் (வருகையின் தூதன்), போதகர் சாது இயேசுதாஸ் (கிருபாசனம் சபை), போதகர் ஆபிரகாம் (இந்தியன் பெந்தேகோஸ்தே சபை), போதகர் என். ஜீவானந்தம் (மகிழ்ச்சி பத்திரிகை), சகோதரி சாராள் நவரோஜி (சென்னை) போன்றவர்களின் வாழ்க்கையில், அவர்களுடைய ஆவிக்குரிய உண்மைத்தன்மை, பரிசுத்த ஜீவியத்தின்மேல் அவர்களுக்கிருந்த தீராவாஞ்சை, கடின உழைப்பின் மேல் இருந்த உறுதித்தன்மை, பொறுமை, அன்பு, தியாகம், தாழ்மை, அடக்கம், கீழ்ப்படிதல், உபவாசம், ஜெபம், ஊழியம் இவற்றை நடைமுறையில் கற்றுக் கொண்டேன். இவைகளைப் பார்த்து, இந்த உலகில் நாம் வாழ்ந்தாலும், நம் கண்களுக்குப் புலப்படாத மறுமை வாழ்வின் நன்மைகளை இவ்வுலகிலும் நாம் பெறமுடியும் என்பதைத் திட்டமாய் அறிந்து, அவர்களின் ஆவிக்குரிய நடக்கைகளைப் பயின்று வந்தேன்.

இந்தச் சூழ்நிலையில் காலஞ்சென்ற அருமைப் போதகர் எஸ். தேவதாசன் (வருகையின் தூதன்) அவர்கள் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள்; அதில் "அன்புத் தம்பி சாம் செல்வ ராஜ், நீ ஆண்டவருக்கு ஊழியம் செய்ய விரும்பினால் உடனே புறப்பட்டு வா" என்று எழுதப்பட்டிருந்தது. இது எனக்கு ஒரு சந்தோஷ செய்தியாகவும், எதிர்காலத்தைக் குறித்த அதிர்ச்சியூட்டும் செய்தியாகவும் இருந்தது.

இதனை என் பெற்றோரிடம் கூறியபோது அவர்கள் மௌனம் சாதித்தனர். நானும் வழக்கம்போல் என் எளிய சாட்சிகளுடன் ஊழியங்கள், ஜெபம், கைப்பிரதி வினியோகம் போன்றவற்றை செய்து கொண்டு, என்னை முழுவதுமாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைத்து, இந்த சிக்கலான காரியத்தை ஆண்டவர் எப்படி கையாளுகிறார் என்பதைப் பொறுமையுடன் காத்திருந்து, கவனித்துக் கொண்டேயிருந்தேன்.

எந்த பாதையும் திறக்கப்படாமலிருந்த சூழ்நிலையில் என் சிநேகிதர் சிலருடைய நேசம் எனக்குக் கிடைத்தது. அவர்களால் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு சிறு சரிவு ஏற்பட்டது. தேவபயமும், நம்பிக்கையும் ஒரு பக்கம் இருக்க, ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்பினால் என் வீட்டின் ஒரு பகுதியை என் நண்பர்களுக்கும், அரசியல் போன்ற காரியங்களின் பயன்பாட்டிற்கும் கொடுத்து, சகோதரர்கள் ஜான், பெருமாள் ஆசாரி, மணிகண்டன் ஆகியோருடன் சேர்ந்து, **'சோம்பேறி மடம்'** என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி சற்று தடம்புரள ஆரம்பித்தேன். என் பெற்றோரும், குடும்பத்தாரும் செய்வது அறியாமல் திகைத்து நின்றனர். இந்நிலையில் என் தாயார் அதிகமாக எனக்காக ஆண்டவரிடம் ஜெபம் செய்தார்கள்.


இந்தச் சூழ்நிலையில் எதிர்பாராதவிதமாக ஒருநாள் காலையில் குடை ஒன்றை ஒரு கையிலும், பரிசுத்த வேதாகமத்தை மறுகையிலும் ஏந்திக் கொண்டு வெள்ளுடை அணிந்து சுமார் 62 வயதான போதகர் எஸ். தேவதாசன் அவர்கள் என் வீட்டு வாசலில் வந்து நின்றார்கள். அவர்களை அதற்கு முன்பு ஒருமுறை அவர்கள் அலுவலகம் சென்று பார்த்திருந்ததால் நான் பயந்து திகைத்து என் தாயாரின் பின் பக்கம் மறைந்து கொண்டேன். போதகர் அவர்கள் என்னையும், என் அறையையும் மிகவும் கனிவுடனும், தீவிரமாகவும் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & போதகர் எஸ். தேவதாசன்

தன் வாயைத் திறந்து, என் தாயாரையும், என்னையும் பார்த்து, "ஆண்டவர் இயேசு இந்தத் தம்பியைத் தம்முடைய மகத்தான ஊழியத்திற்கு அழைக்கிறார். நாளை காலை 9.00 மணிக்கு என் அலுவலகத்திற்கு இந்தத் தம்பி சாம் செல்வ ராஜ் வரவேண்டும்" என்று சொல்லி, ஜெபித்துவிட்டுப் போய்விட்டார்கள்.


அந்த நேரத்திலிருந்து எங்கள் குடும்பத்தில் ஓர் பெரிய மனமகிழ்ச்சி உருவானது. மிகவும் விரும்பத்தக்கதான ஒரு நல்வாசனை எங்கள் வீட்டை நிரப்பிற்று. நான் உருவாக்கின **சோம்பேறி மடத்தை** என் ஜெப அறையாக மாற்றி, புதுப்பித்து, அன்று என் நண்பர்களை அழைத்து,






என் தாயார் மூலம் ஒரு விருந்தை அளித்து, அவர்கள் எல்லாரிடமும் இருந்து விலகி விடைபெற்றேன். அவர்கள் மறு உத்தரவு சொல்ல முடியாமல் திகைத்துத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

போதகர் எஸ். தேவதாசன் அவர்களுடைய கட்டளைப்படி அடுத்தநாள் நான் அவர்களிடம் அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய மகனாகவும், அவர்களுக்கு ஒரு கடைநிலை ஊழியனாகவும் என்னை அர்ப்பணித்தேன்.



அவர்களுடைய வாழ்க்கையை ஒவ்வொரு சிறுபகுதியாக நான் கவனித்து அவர்களுக்கு ஏற்ற ஒரு அடிமட்ட உதவியாளனாக மாறி விட்டேன். அவர்களைப் போல நெடுமுழங்காலில் நின்று நீண்டநேரம் ஜெபிக்கவும், அதிக நேரம் எடுத்து சாவகாசமாகப் பரிசுத்த வேதத்தை வாய்விட்டு வாசிக்கவும், தியானிக்கவும், தேவன் சொல்லுவதை ஒரு புத்தகத்தில் எழுதி வைப்பதையும் கற்றுக்கொண்டேன்.

என் எதிர்காலத்தில் எப்படி ஆண்டவர் என்னை பயன்படுத்துவார் என்பதை அறிந்து என்னை தேவ நீதியிலும், பரிசுத்தத்திலும், ஆத்தும பாரத்திலும், உண்மையிலும், ஜெபத்திலும், தியானத்திலும், ஊழியத்திலும் மிகவும் கண்டிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் அந்தப் போதகர் அவர்கள் வழிநடத்தினார்கள். மட்டுமின்றி உண்மை ஊழியம் செய்வது எப்படி ? பரிசுத்த வாழ்க்கை என்றால் என்ன ? பணம் இல்லாமலேயே ஊழியம் செய்வது எப்படி ? வேதத்தின்படி ஊழியத்திற்குப் பணம் உண்டாக்குவது எப்படி ? போன்ற காரியங்களை மிகவும் தெள்ளத் தெளிவாகக் கற்பித்து அவற்றை நடைமுறைப்படுத்தத்தக்கப் பயிற்சியும் அளித்தார்கள். **(தொடரும்...)**

************

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

**ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார்**'' (லூக்கா 16 : 13).

## இ. அன்பிலே நடக்க வேண்டும்

எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்ததுபோல நாம் எல்லாரும் அன்பிலே நடந்து கொள்ள வேண்டும் (எபேசியர் 5 : 2). 1 கொரிந்தியர் 13–ஆம் அதிகாரம் பூரண அன்பைப் பற்றி விளக்கம் அளிக்கிறது. அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, அன்பு இறுமாப்பாயிராது, அயோக்கிய மானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும், அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது, நிறைவான அன்பு வரும்போது குறைவான யாவும் ஒழிந்துபோகும், அன்பே பெரியது.

## ஈ. பரிசுத்த நடக்கையுடன் வாழவேண்டும்

பரிசுத்தவான்களுக்கு எதிராய் வேசித்தனமும், மற்ற எந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் சொல்லப்படக் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமானப் பேச்சும், பரியாசமும் தகாதவைகள், ஸ்தோத்திரம் செய்தலே சரியானதாகும். ''**மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்**'' (எபேசியர் 5 : 3, 4).

## உ. கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அர்ப்பணிப்புள்ளவர்கள்

விபச்சாரம் செய்கிறவர்கள், அசுத்தமானக் காரியங்களைச் செய்கிறவர்கள், விக்கிரக ஆராதனை செய்கிறவர்களான பொருளாசைக்காரர்கள், பொய்யர்கள் ஆகிய இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பங்கடைவது இல்லை. ''**அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே**'' (எபேசியர் 5 : 4, 5).

திருவள்ளுவர் என்னும் புலவர், ''மழித்தலும், நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்து விடின்'' என்று கூறியுள்ளார். வேறுபடுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோம் என்று கூறி தலை முடியை மொட்டை அடித்துக் கொண்டும், தாடியை வளர்த்துக் கொண்டும் வெளியே வேஷம் போட வேண்டாம். செய்யக்கூடாதவை என்று அறியப்பட்டிருக்கும் கேடானக் காரியங்களைச் செய்யாமல் இருத்தலே நலம். ''**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்**'' (மத்தேயு 15 : 8,9).

## ஊ. ஜீவ பலியாய் ஒப்புக் கொடுத்தல்

நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவன் நம்மை அழைக்கிறார். இயேசுவை அறிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை இதுவே. அதாவது, ''**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்**'' (ரோமர் 12 : 2).

இந்த அனுபவம்தான் எல்லா அனுபவங்களிலும் உன்னதமானது. இதுக்கடினமாகத் தோன்றலாம். ஆனால் இந்த அனுபவத்தைப் பெற்றவர்கள் தேவனுடைய மெல்லிய சத்தத்தைத் தெளிவாய்க் கேட்க முடியும். மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். ''**...தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்**'' (வெளிப்படுத்தல் 21 : 3). இவ்வுலக வாழ்க்கையிலும் இந்த அனுபவத்தை தேவன் நமக்குத் தருவாராக. ஆமென்.

************

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## தேவை

1. மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர் (முதுநிலைப் பட்டத் தகுதியும், அனுபவமும், திறமையும் வாய்ந்தவர்கள்)
2. அலுவலகப் பணியாளர்கள் (கம்யூட்டர் மற்றும் தட்டச்சு ஆகியவற்றில் அனுபவமும், திறமையும் வாய்ந்தவர்கள்)

தொடர்புக்கு : அழைப்பின் எதிரொலி

செல் : 98412 71858

மின் அஞ்சல் : sam@echoofhiscall.org

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❀ வருட சந்தா ரூ. 100/–  ❀ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th JULY 2022
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**